REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04) 5 PAGES பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

FILM - 23 JULY 2026 CLICK - 04 ₹. 1

நமக்கு நாமே பாதுகாப்பு திட்டத்தில் பங்களிப்பு உறுப்பினராக உடனே இணைந்து, போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!!

- CVPA NNT

## CVPA NNT-ல் இணைந்து 2 லட்சம் இலக்கை எட்டுவோம்

CHENNAI VIDEO PHOTOGRAPHER'S ASSOCIATION
CVPA
Regd. No.: 446/96

# சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

## 29 ஆவது பொதுக்குழு கூட்ட அழைப்பிதழ்

நாள் : 07.08.2026

நேரம் : காலை 9.00 மணி முதல்

இடம் : முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருமண மண்டபம்.
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.600 002

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரையும்

வருக... வருக...

என அன்போடு வரவேற்கிறோம்.

இப்படிக்கு

CVPA நிர்வாகிகள் மற்றும்
பகுதி செயலாளர்கள்

## CVPA-ன் 29 ஆவது பொதுக்குழு அறிவிப்பு

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

நமது சங்கத்தின் 29-ஆவது பொதுக்குழு கூட்டம் வரும் 07.08.2026 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருமண மண்டபம், 123, குருவப்பா தெரு, சிங்கன்ன செட்டித் தெரு ஜங்ஷன், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002 என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு CVPA தலைவர் திரு. V. புருஷோத்தமன் அவர்கள் தலைமை தாங்குகிறார். CVPA செயலாளர் திரு. P. துரைபாபு அவர்கள் முன்னிலை வகிக்கிறார். சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகள் வாழ்துரை வழங்குகின்றனர்.

உறுப்பினர்களின் வருகைப் பதிவேட்டுடன் தொடங்கும் இப்பொதுக் குழுவில், வரவேற்புரையை பின்னர், நமது சங்கத் தலைவர் திரு. V. புருஷோத்தமன் அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்.

கடந்த ஓராண்டாக சங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் குறித்த அறிக்கையை சங்க செயலாளர் திரு. P. துரைபாபு அவர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் முன்பு சமர்ப்பிக்கிறார்.

அதனைத் தொடர்ந்து பொருளாளர் திருமதி. கௌரி பார்த்தசாரதி அவர்கள் பொருளாளர் அறிக்கையை சமர்ப்பிக்கிறார். இவர்களுடைய அறிக்கைகள் ஒப்புதல் பெற்ற பிறகு, சங்க உறுப்பினர்களிடம். சங்க நிர்வாகிகளின் கலந்துரையாடல் நடைபெறும்.

பின்னர் பொதுக்குழுவில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

இறுதியாக நமது சங்க CVPA PRO திரு. V. பாலச்சந்தர் அவர்களின் நன்றியுரையுடன் CVPA-வின் 29-ஆவது பொதுக்குழு கூட்டம் நிறைவு பெறும்.

நடைபெற உள்ள இந்த பொதுக்குழு கூட்டத்தில், அடையாள அட்டையை புதுப்பித்துள்ள அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு CVPA நிர்வாகம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது. மதிய உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரெனிவலில் உள்ள சங்க உறுப்பினர்கள் அனைவரும் இந்த பொதுக்குழுவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- CVPA

**சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்**
எண்.51/24, பங்காரு தெரு, எல்லீஸ் ரோடு, சென்னை - 2.
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in **Cell : 7824034734**
**Regd No. : 446/96**
20.07.2026

**பொதுக்குழு கூட்டம் அறிவிப்பு**

அன்புள்ள சங்க உறுப்பினர்களுக்கு, வணக்கம்.

நமது சங்கத்தின் **29வது பொதுக்குழு கூட்டம் வருகிற 07-8-2026** நடைபெற உள்ளது. காலை 9.00 மணி முதல் தொடங்கும் பொதுக்குழு கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொண்டு, சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். கூட்டத்திற்கு வரும் போது அடையாள அட்டையை தவறாமல் கொண்டு வரவும், அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது.

**பொதுக்குழு நேரம் : காலை 9.00 முதல்**

**இடம் : முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருமண மண்டபத்தில்,**
**சென்னை - 123, குருவப்பா தெரு, சிங்கன்ன செட்டி தெரு ஜங்ஷன்,**
**சிந்தாதிரிபேட்டை, சென்னை - 600002.**

| | |
|---|---|
| காலை 09-00 மணி | வருகை பதிவேடு (உறுப்பினர் அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் மட்டும்) |
| காலை 10-00 மணி | தமிழ்த்தாய் வாழ்த்து |
| காலை 10-01 மணி | வரவேற்புரை |
| காலை 10-05 மணி | தலைமையுரை |
| காலை 10-15 மணி | வாழ்த்துரை : CVPA முன்னாள் நிர்வாகிகள் |
| காலை 10-30 மணி | செயலாளர் அறிக்கை |
| காலை 11-00 மணி | செயலாளர் அறிக்கை ஒப்புதல் பெறுதல் |
| காலை 11-15 மணி | 2025-2026 ஆண்டு வரவு செலவு கணக்கு சமர்ப்பித்தல் |
| காலை 11-30 மணி | நிதிநிலை அறிக்கை குறித்து விவாதித்தல், ஒப்புதல் பெறுதல். |
| காலை 12-00 மணி | திர்மானம் ஒப்புதல் பெறுதல் & பொது விவாதம் |
| மதியம் 12-30 மணி | மதிய உணவு |

இதனையே அழைப்பாக ஏற்றுக்கொண்டு, ரெனிவலில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் மேற்படி பொதுக்குழு கூட்டத்திற்கு வரும்படி அன்புடன் அழைக்கிறோம்.

**குறிப்பு :** சங்க செயல்பாடுகள் குறித்து உறுப்பினர்களின் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் புகார் மற்றும் குறைகளை கடிதம் மூலம் தெரியப்படுத்தவும். இக்கடிதம் உங்கள் பகுதி துணை தலைவர். இணைச்செயலாளர் அல்லது பகுதி செயலாளர் மூலமாக தெரியப்படுத்தவும். இந்த கடிதங்களுக்கு பொதுக்குழுவில் முன்னுரிமை வழங்கப்படும்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | P.R.O. |
|---|---|---|---|
| V.புருஷோத்தமன் | P.துரைபாபு | கௌரி பார்த்தசாரதி | V. பாலசந்தர் |

---

CVPA சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!

நமது தலைவர் புருஷோத்தமன் அவர்கள் தலைமையிலான இந்த நிர்வாகம் இரண்டு வருடங்களை கடந்து விட்டது. நமது சங்கம் 29 வது பொதுக்குழுவை நோக்கி நகர்ந்து வந்துவிட்டது. இது எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம்தான் என்றாலும், சீரான ஒரு விலை பட்டியலை சங்கத்தால் இன்னும் வெளியிட முடியவில்லையே என்ற கேள்வியை, சங்க நிர்வாகிகளை பார்த்து அடிக்கடி கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இதற்கு பல மாவட்டங்களை முன் உதாரணமாக எடுத்து சொல்லியும் வருகிறார்கள். ஒருங்கிணைந்த விலைப்பட்டியலை வெளியிட CVPA நிர்வாகிகள் ஏதோ தடையாக இருப்பது போலவே எல்லோரும் கேட்கின்றனர். இந்த விஷயத்தில் நாங்கள் எப்போது வேண்டுமானாலும் விலைபட்டியல் வெளியிட தயாராக இருக்கிறோம். இதை வைத்து நமது கலைஞர்கள் மேம்பட வேண்டும் என்றுதான் சங்கம் நினைக்கிறது.ஆனால் விரல் விட்டு எண்ணி சொல்ல முடியாத அளவிற்கு ஆங்காங்கே பல தவறுகளையும், வேண்டாத சில வேலைகளையும் சங்கத்தின் பக்கம் எட்டிக்கூட பார்க்காத சிலர் செய்கின்றனர்.இதில் சங்க உறுப்பினர்களை காட்டிலும், வெளி ஆட்கள் செய்யும் தவறுகள்தான் அதிகமாக இருக்கிறது என்பதை அனைவரும் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

மேட்ரிமோனியல் நிறுவனம் நமது சங்கத்தின் மீது போட்ட வழக்கை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அதை எதிர்த்து நின்று போராடி வெற்றி கண்டது நமது சங்கம். இதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். இன்று வியாபார போட்டியின் காரணமாக பல்வேறு விளம்பரங்கள் வாட்ஸ் அப்பில் வருகின்றன. ஆனால் மேட்ரிமோனியல் நிறுவனம் அன்றே தொலைக்காட்சியில் விளம்பரம் கொடுத்து அல்ட்ரா சிட்டி செய்தது. ஆங்காங்கே ஆசை வார்த்தைகள் கூறி கேமராமேன்களை வளைத்து பிடித்தது. இதையெல்லாம் எதிர்த்து நின்று அன்று போராடினோம். நமது வழக்கிற்கு பிறகு அந்த நிறுவனம் எங்கே போனது என்று உங்களுக்கே தெரியும்.

சில வருடங்களுக்கு முன்பு இருந்த நிலை இப்போது இல்லை என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். 'கோவிட்' கால கட்டத்திற்கு பிறகு, எல்லா தொழில்களின் எதிர்காலமும் கேள்விக்குறி ஆக்கப்பட்டு விட்டது. இதில் முண்டியடித்து முதல் வரிசையில் நிற்பது நமது தொழில் தான். காரணம், சமூக ஊடகங்களில் இருந்து பூற்றிசல் போல ஒவ்வொரு நாளும் ஒரு கூட்டம் வருகிறது. இதில் கற்று தேர்ந்த வரும் உண்டு. கத்து குட்டிகளும் உண்டு. பீட்டர் இங்கிலீஷ் பேசி வாடிக்கையாளர்களை தன்வசப்படுத்தும் இளைஞனும் இங்கே உண்டு. வந்தவரை லாபம் என்று சுருட்டிக் கொண்டு போகும் கயவர்களும் இங்கே உண்டு. இந்த கூட்டம்தான் இப்போது இந்தியாவில் உள்ள புகைப்பட கலைஞர்களுக்கு பெரும் தலைவலியாக இருந்து வருகிறார்கள்.

இன்றைக்கு நாமெல்லாம் GST பிரச்சனை இல்லாமல் நிம்மதியாக இருக்கிறோம். என்று சொன்னால் அதற்கு முழு முதல் காரணம் CVPA தான். அன்று சேவை வரிக்காக போராடிய நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் ராமகிருஷ்ணன், முன்னாள் செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய சக நிர்வாகிகளையே சாரும் என்பதை இந்த நேரத்தில் நினைவு கூறுகிறோம்.

20 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த தொழில்நுட்ப உபகரணங்களை இப்போது நாம் எதையும் காண முடிவதில்லை. இதே நிலைதான் அடுத்த தலைமுறையிலும் தொடரும். எல்லாமே இந்தியாவில் உலகமயமாக்கல் கொள்கை கடைபிடிக்கப்பட்ட பின் வந்த கோளாறுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இனி வரும் தலைமுறைக்கு சேர்க்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மிகப்பெரிய சவாலாக இருக்கும். இதை எல்லோரும் புரிந்து செயல்பட்டால், புகைப்படத் தொழில்நுட்பம் மிகவும் பிரகாசமாக இருக்கும்.

இப்படிக்கு


P.**துரைபாபு**, **CVPA** செயலாளர்

---

### வருந்துகிறோம்



வடசென்னை, திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் **திரு.ஜோசப்** அவர்கள் இயற்கை (20.07.2026) எய்தினார்.அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த சங்க நிர்வாகிகள்,மறைந்த நமது சங்க உறுப்பினர்களுக்கு பொதுக்குழு தீர்மானத்தின்படி வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 10,000 ரூபாயை அவருடைய குடும்பத்தினரிடம் சங்க நிர்வாகிகள் வழங்கினார்கள்.



தென் சென்னை எஸ்-2, திருவான்மியூர் பகுதியை சேர்ந்த நமது சங்கத்தின் ஆயுட்கால மூத்த உறுப்பினர், திரு.P. அங்கமுத்து-திருமதி. A.லதா தம்பதியினரின் மகள் A.மலர்விழி - திரு. N. கிருஷ்ணகாந்த் ஆகிய இருவருக்கும் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் CVPA சார்பாக, CVPA சங்கத்தின் இந்நாள்- முன்னாள் நிர்வாகிகள், பகுதி செயலாளர், மற்றும் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்



வடசென்னை, திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.சொர்ணகுமார் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற சுபநிகழ்ச்சியில் நமது சங்கத்தின் சார்பில்,சங்க நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




வடசென்னை,எர்ணாவூர் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு- திருமதி மகேஷ்- ஜெயலட்சுமி தம்பதியினரின் குழந்தை சாய் ஹரிஷ் தனது முதல் பிறந்த நாளை ( 19.07.2026) சிறப்பாக கொண்டாடினார். நமது சங்கத்தின் சார்பாக சங்க நிர்வாகிகள், பகுதி செயலாளர், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தை சாய் ஹரிசை வாழ்த்தினார்கள்.



சென்னை நந்தம்பாக்கம், டிரேட் சென்டரில் இமேஜ் டுடே எக்ஸ்போ மூன்று நாட்கள் நடைபெற்றது. நமது CVPA சங்கத்திற்காக பை-செல் நிறுவனம் மூன்று நாட்களும் நமக்காக ஸ்டால் அமைத்துக் கொடுத்தது. இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பை-செல் நிறுவனத்தின் இயக்குனர் திரு.ரவி அவர்களுக்கு, CVPA சார்பாக சங்க நிர்வாகிகள் மரியாதை செய்தனர்.





வடசென்னை தண்டையார்பேட்டையில் அமைந்துள்ள வாணி மஹால் திருமண மண்டபத்தில் CVPA சார்பாக,செயற்கை நுண்ணறிவு(AI) குறித்து பயிற்சி வகுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. AI தொழில்நுட்ப வல்லுனரும், பிரபல பயிற்சியாளருமான திரு.தாஸ் தணிகாசலம் அவர்கள் இந்த பயிற்சி வகுப்பை நடத்தினார். AI மூலம் இனி ஏற்பட போகும் பயன்பாடுகள்,புதிய வாய்ப்புகள்,தொழில் வளர்ச்சிக்கான நவீன கருவிகள் மற்றும் எதிர்கால மாற்றங்கள் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.165க்கும் மேற்பட்ட ஒளிப்பட கலைஞர்கள் இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். குறிப்பாக பெண்களும் இந்த பயிற்சி வகுப்பில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.CVPA நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள் முன்னிலையில் இந்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

## வருந்துகிறோம்

மத்திய சென்னை அயனாவரம் பகுதியை சேர்ந்த, நமது சங்கத்தின் ஆயுட்கால மூத்த உறுப்பினரும், CVPA NNT-ன் பங்களிப்பாளராக இருந்தவர், மாநில சங்கத்தின் முன்னாள் மண்டல செயலாளர் திரு. **R.கார்மேல் நேவிஸ் குமார்** (வயது55) அவர்கள் இம்மாதம் 28.07.2026 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன். நமது சங்கத்தின் சார்பாக பொதுக்குழு தீர்மானப்படி மறைந்த சங்க உறுப்பினர்களின் குடும்பத்தாரிடம் வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயை CVPA நிர்வாகிகள் வழங்கினார்கள். இவருக்கான CVPA NNT குடும்ப நல பாதுகாப்பு நிதி இவரது குடும்பத்தினரிடம் விரைவில் வழங்கப்படும்.

- CVPA



Regd No. : 446/96

**சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்**

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி

## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்

## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ரூபாய்

(* நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtarunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351